ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2359/05 - 2023 නොවැම්බර් මස 20 වැනි සඳුදා - 2023.11.20

*2359/05 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "பொத்துவட்டவன மகா விஹாரை புனிதப் பிரதேசம்" என அழைக்கப்படும் இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) "பொத்துவட்டவன மகா விஹாரை புனிதப் பிரதேசம்" இற்கான பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2023, நவெம்பர் 16.

1A – G 40791 – 11 (2023/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

வடமேல் மாகாணத்தின் புத்தளம் நிருவாக மாவட்டத்தில் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவினுள், இல. 464, பொத்துவட்டவன கிராம அலுவலர் பிரிவினுள் பொத்துவட்டவன கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 2023, யூலை மாதம் 27 ஆந் திகதிய சுவட்டுத்திட்ட இல. PU/DNK/2023/314 என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக "பன்சலயாய கெலே" எனவழைக்கப்படும் காணித்துண்டு இல. "ஏ" அடங்கியுள்ளதும் பரப்பளவில் 1.1798 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் ஏ - பன்சலயாய கெலே

காணித்துண்டு இல. A - வெல்லடுவகாடு

வடக்கு : வீதி, எஸ். ஏ. சீதா குமுதுனீயினால் உரிமை கோரப்படும் தல்கஹவத்த மற்றும் வீதி ;
கிழக்கு : எஸ். ஏ. சீதா குமுதுனீயினால் உரிமை கோரப்படும் தல்கஹவத்த மற்றும் வீதி ;
தெற்கு : வீதி, பிரதேச சபை வீதி, வீதி மற்றும் பிரதேச சபை வீதி ;
மேற்கு : பிரதேச சபை வீதி மற்றும் வீதி.

EOG 11-0204